இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 112 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 16 – ஞாயிற்றுக்கிழமை 01 டிசம்பர் 2024 – சென்னை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 112: Thiruvalluvar Year - 2055 - Karthigai 16 - Sunday 01 December 2024 - Chennai 12 Pages ₹ 5.00





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.11.2024) ”ஃபெஞ்சல் புயல் காரணமாக சென்னையில் கனமழை பெய்து வருவதால், பூக்கடை பேருந்து நிலையம் அருகிலுள்ள கழிவுநீர்உந்து நிலையத்திற்கு நேரில் சென்று, மழைநீர் மற்றும் கழிவுநீர் வெளியேற்றப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.11.2024) ”ஃபெஞ்சல் புயல் காரணமாக சென்னையில் கனமழை பெய்து வருவதால், இராயபுரம், சூரியநாராயணன் தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த உணவுக்கூடத்திற்கு நேரில் சென்று, பொதுமக்களுக்கு வழங்குவதற்காக உணவு தயாரிக்கப்படும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் கே.என். நேரு, பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இரா. மூர்த்தி, துணை மேயர் மு. மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சென்னையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெறுவதால் எந்தப் பிரச்சினையும் இல்லை!

# முழுமையான நிவாரண நடவடிக்கைகள் வேண்டும்!

## மாவட்டங்களின் நிர்வாகத்திற்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, டிச. 1 -**

**“கனமழையின் காரணமாக முழுமையான நிவாரண நடவடிக்கைகள் வேண்டும்” என்று மாவட்ட நிர்வாகங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.11.2024) சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்ட பிறகு செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-

தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்களாக மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் மூலம் எச்சரிக்கைப்பட்டிருந்த நிலையில், தமிழ்நாடு அரசு அது குறித்து தொடர்ந்து ஆய்வு நடத்தி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அது உங்களுக்கு நன்றாக தெரியும். நேற்றிரவு கடுமையான மழை பெய்திருக்கிறது. தொடர்ந்து மழை பெய்து கொண்டிருக்கிறது. இன்று இரவு புயல் கரையை கடக்கும் என்று செய்தி வந்திருக்கிறது.

**நிவாரண முகாம்களில் மக்களுக்கு உணவு!**

இந்நிலையில் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர், காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, செங்கல்பட்டு ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தொடர்புகொண்டு அங்கிருக்கக்கூடிய நிலவரங் களை எல்லாம் கேட்டு தெரிந்து கொண்டோம். நிவாரணப் பணிகள் எந்தளவிற்கு நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டோம்.

நிவாரண முகாம்கள் எல்லாம் ஆங்காங்கு அமைக்கப்பட்டு மக்களும் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். உணவும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்று இரவு நிச்சயமாக கடுமையான மழை பெய்யும் என்கின்ற காரணத்தால், முழுமையான நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்று நாங்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட்டிருக்கிறோம்.

**செய்தியாளர்:** சென்னை தவிர மற்ற மாவட்டங்களில் என்ன நிலை என்பது பற்றி....

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :** மற்ற மாவட்டங்களில் அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய பொறுப்பு அமைச்சர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் அந்தப் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**செய்தியாளர்:** ஸ்மார்ட் சிட்டி தி.நகர் பகுதிகளில் தண்ணீர் தேங்குவதாக குற்றச்சாட்டு வந்தது. தற்போது சரிசெய்யப்பட்டு விட்டதா?

**மு.க.ஸ்டாலின்:** இப்போது இல்லை. தற்போது தண்ணீர் வடிந்து கொண்டிருக்கிறது. ஒன்றும் பிரச்சனை இல்லை.

**செய்தியாளர் :** மழை தொடரும் பட்சத்தில், சென்னைக்கு எந்த மாதிரியான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது?

**மு.க.ஸ்டாலின் :** சென்னையில் எங்கு தண்ணீர் தேங்குமோ, அந்த இடத்திற்கு முன்கூட்டியே நாங்கள் அதற்குரிய நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தினால் இப்போது எந்தவித பிரச்சனையும் இல்லை என்பதுதான் செய்தி. அப்படி இருந்தாலும் அது சமாளிக்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டியளித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.11.2024) சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, ஃபெஞ்சல் புயல் காரணமாக சென்னை மற்றும் அதன் சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதால் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காணொலிக் காட்சி வாயிலாக திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் திருமதி பெ. அமுதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



